## <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

## <u>அ.வ.எண்.376/2009</u>

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி. K. அம்பிகா, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி 1 வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2020 ஆண்டு ஜனவரி மாதம் 09 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 09.01.2020**

**பெயர் - சின்னகௌத்தி**

**த/பெ - சின்னா நாயக்கர்**

**வயது -**

**சாட்சி - DW1**

**விசாரணை தொடங்கும் நேரம் -03.**32pm

**<u>குறுக்கு விசாரணை -</u>**

வாதி அறக்கட்டளையின் தர்மகர்த்தா மோகன சுந்தரத்தை தெரியாது. இந்த வழக்கை யார் என் மீது தாக்கல் செய்தார்கள் என்றால் கல்யாண சுந்தர செட்டியார் தாக்கல் செய்தார். எனது பதில் உரையில் இந்த வழக்கை தாக்கல் செய்தது கல்யாணசுந்தர செட்டியார்தான் என்றும் மோகனசுந்தர செட்டியார் இல்லை என்றும் குறிப்பிட்டு இருக்கவில்லை என்றால் சரிதான். சர்வே எண் 781ல் 16 X 22 அடி மொத்தம் 382 சதுர அடி இடத்தை காலி செய்து சுவாதீனம் ஒப்படைக்க வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து அவர்களுடையது இல்லை. வாதி எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சொத்து அவருடையது என்று தாக்கல் செய்தார் ஆனால் சொத்து அவருடையது இல்லை. என் வழக்கு சொத்து கோவிலுக்கு சொந்தமானது அதனால் எங்களுக்கு சொந்தம். வழக்கு சொத்து கோவிலுக்கு சொந்தமானது என்பதற்கும் எங்களுக்கு சொந்தமானது என்றும் நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. எதன் அடிப்படையில் நான் சொத்தை அனுபவித்து

வருகிறேன் என்றால் கோவிலுக்கு சொந்தமான காலி இடத்தில் என் தாத்தா வீடு கட்டினார் அதில் தொடர்ந்து நாங்கள் குடியிருந்து வருகிறோம். கோவிலுக்கு சொந்தமான இடம் என்பதால் கோவில் நிர்வாகத்திடம் அடிமனை வாடகை ஒப்பந்தம் ஏதேனும் ஏற்படுத்தினேனா என்றால் இல்லை. கோவில் நிர்வாகத்திடம் வாடகை ஏதேனும் செலுத்தி அதற்கான ரசீது உள்ளதா என்றால் சொத்தின் உரிமையாளர்கள் எதுவும் கேட்காததால் செலுத்தவில்லை. எந்த கோவிலுக்கு சொந்தமானது என்றால் மீஞ்சூர் வரதராஜன் பெருமாள் கோவிலுக்கு சொந்தமானது. வருடாந்திரம் கோவில் தேர் திருவிழாவின் போது நெய்தவாயல் கிராமத்தில் தண்ணீர்பந்தல் அறக்கட்டளை அன்னதானம் செய்வார்கள் என்றால் யாரும் செய்ததில்லை. எனது பதில் உரையில் கூடுதலாக 3052 சதுர அடி எனது அனுபவத்தில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன். வழக்கு சொத்தின் சர்வே எண் மற்றும் மொத்த பரப்பளவை நான் ஒப்புக்கொள்கிறேன். வாதி 2 மற்றும் 3ம் பிரதிவாதிகளை அனுகி மின் இணைப்பை துண்டிக்க முயற்சித்தபோது நான் அதற்கு ஆட்சேபனை தெரிவித்தேன். 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் வழக்கிற்கு தேவையான தரப்பினர் என்றால் சரியல்ல. என் உரிமையை நிலைநாட்ட என்ன வருவாய் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பட்டா வேண்டி மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை. என் பதில் உரையில் 100 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவத்தில் இருப்பதால் எதிர் இடை சுவாதீணம் கோரியுள்ளேன். என் படியே வழக்கு சொத்து கோவிலுக்கு சொந்தமானது என்பதால் எதிரிடை சுவாதீணம் கோர முடியாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து கோவிலுக்கு சொந்தமான சொத்து என்று எனது பதில் உரையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எனது பதில் உரையில் 1960ல் பால சுந்தர செட்டியார் என்பவரிடம் எனது தந்தை சின்னா நாயக்கர் 3 ஆண்டுகளுக்கு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியதாக குறிப்பிட்டுள்ளேன். கிரைய தொகையாக எவ்வளவு பேசப்பட்டது என்று எனக்கு தெரியாது. ஒப்பந்தத்தின் படி 3 ஆண்டுகளுக்குள் கிரைய ஆவணம் ஏற்படுத்தப்பட்டதா என்றால் அது பற்றி தெரியாது. எனது பிரமான வாக்குமூலம் பத்தி 3ல் என்னை போலவே சுமார் 37 குடும்பங்கள் வீடுகட்டி குடியிருப்பதாக கூறியுள்ளேன். அவர்கள் அனைவரும் வழக்கு சர்வே எண் சொத்தில் தான் குடியிருந்து வருகின்றனர். அவர்கள் மீதும் வழக்கு நிலுவையில் உள்ளது. அதில் சில வழக்குகளில் வாதி சார்பாக தீர்ப்பாகி உள்ளது. நான் தாக்கல் செய்த பிசா ஆ 5 மற்றும் பிசா ஆ 11 ஆவணங்கள் படியே வழக்கு சொத்து வாதிக்கு உரிமையான சொத்து என்று தெரியாவருகிறது என்றால்

சரியல்ல. பிசா ஆ 6 மற்றும் பிசா ஆ 7 கண்ட வழக்குகளின் தீர்ப்பு வாதிக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி வழக்குகளில் மேல் முறையீடு செய்யப்பட்டு பொன்னேரி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. பிசா ஆ 8 மற்றும் பிசா ஆ 9 ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்ட ஆவணங்கள் என்றாலும் அதன்மீது எந்தவித உத்தரவும் இல்லை என்றாலும் மேற்படி ஆவணங்களின் படி வழக்கு சொத்து இந்து அறநிலைய துறைக்குதான் சொந்தமானது என்பதற்கு ஆதாரமாக ஆவணம் எதுவும் தாக்கல்செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்யவதற்கு முன்பே வாதி இடத்தை காலி செய்ய கோரி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் அதற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பினேன். அதே போல் 2 மற்றும் 3 வது பிரதிவாதிகளுக்கும் அறிவிப்பு அனுப்பியிருந்தார். வழக்கு சொத்து வாதிக்கு சொந்தமானது என்றும் அதனை காலி செய்யக்கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சட்டவிரோதமாக குடியிருந்து வருவதால் நாள் ஒன்றுக்கு ரூ 15/- வழக்கு தாக்கல் செய்த தேதியில் இருந்து சுவாதீனம் ஒப்படைக்கும் வரை செலுத்தவேண்டும் என்றும் 2 மற்றும் 3 பிரதிவாதிகளை வழக்கு சொத்தில் வாதி பெற்ற மின் இணைப்பை துண்டிக்க செயலுறுத்து கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல்செய்துள்ளார் என்றால் சரியல்ல. பால சுந்தர செட்டியார் என்பவரிடம் சின்னா நாயக்கர் 1960லிலேயே வழக்கு சொத்து தண்ணீர் பந்தலுக்கு சொந்தமானது என்று தெரிந்தே ஒப்பந்தம் செய்தார் என்றால் அது பற்றி தெரியாது. பால சுந்தர செட்டியார் என்பவர் மோக சுந்தரத்தின் தாத்தா என்றால் சரிதான். வழக்கு சொத்து வாதிக்கு சொந்தமானது என்றாலும் தற்போது பதில் உரையில் கூறிப்பிடாத நிலையில் அறநிலைய துறைக்கு சொந்தமானது என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம் -04.08pm**